**பாததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பாததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 10,368,381 தொகை பெறுமதியான 26 காணித் துண்டுகள் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 67 காணித் துண்டுகள் 77 குழாய்க் கிணறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த 528 கல்வனைய்ஸ் (GI) குழாய்களின் பெறுமதி ரூபா 584,573 தொகையினைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 492,866 ஆகக் காணப்பட்டதுடன் பட்டோலைகளின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 480,650 ஆக காணப்பட்டமையால் ரூபா 12,216 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 79,597,306 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,361,326 ஆகும்.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 74,961,683 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,502,800 ஆகக் காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுப் பெறுமதி ரூபா 4,799,440 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,675,194 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,881,271 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,793,923 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத் தினத்தில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 1,688,226 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது சிட்டை இடப்பட்டவைகள் ரூபா 5,420,626 ஆக காணப்பட்டது. ஆண்டின் போது அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 61 உம் மற்றும் சிட்டை இடப்பட்டவைகளின் நூற்றிற்கு 68 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 2,412,398 ஆகும். நிலுவை வீத வரி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158(1) மற்றும் 159(1) இன் ஏற்பாடுகளை கடைபிடித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 10 அரச நிறுவனங்களில் இருந்து 01 வருடம் மற்றும் 13 வருடங்கள் இடைப்பட்ட காலம் முதல் காணப்படும் நிலுவை வீத வரி ரூபா 43,859 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 389,847 ஆக காணப்பட்டதுடன் அம் மீதியில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள தொகை ரூபா 384,037 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 09 கடைகளில் இருந்து 2000 முதல் 2011 காலப் பகுதி தொடர்பாக ரூபா 331,158 இற்கான கடை வாடகையினை அறவீடு செய்திருக்கவில்லை. அத்துடன் அது தொடர்பாக வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீர்க் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 235,743 ஆகக் காணப்பட்டதுடன், அம் மீதியில் 01 வருட காலத்தை விஞ்சியுள்ள நிலுவைத் தொகை ரூபா 146,075 ஆக காணப்பட்டது.

(ஆ) தற்போது செயற்படாத மீகம்மன யடவர நீர் வழங்கள் திட்டத்தின் 60 நீர் நுகர்வோர்களிடம் ரூபா 29,890 இற்கான நிலுவை நீர்க் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையினால் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 22,576,198 தொகையொன்று கிடைக்க வேண்டிக் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 கல்வணய்ஸ் குழாய் பெறல்

------------------------------------------------

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் மேலதிக செயலாளரின் (அபிவிருத்தி) 2014 திசெம்பர் 19 திகதி இலக்கம் பீஎல்/3/1/9 கொண்ட கடிதத்தின் மூலம் ரூபா 584,573 தொகை பெறுமதியான 528 கல்வணய்ஸ் குழாய்கள் பராமரிப்பு தளத்திற்கு பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 7,750 தொகை பெறுமதியான 07 கல்வணய்ஸ் குழாய்கள் அங்கத்தவர் ஒருவர் அவரது தனிப்பட்ட பாவணைக்காக எடுத்து சென்றிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூலை 21 திகதி வரை அதனை திருப்பி சபைக்கு ஒப்படைத்திருக்கவில்லை.

(ii) ரூபா 107,393 பெறுமதியான 97 குழாய்களைப் பயன்படுத்தி சபையின் உட்பகுதியில் இராக்கை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலை தொடர்பாக மதிப்பீடு, வரைபுகள் மற்றும் மதிப்பீட்டின் பிரகாரம் விடயங்கள் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என தொழிநுட்ப அலவலரின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) ரூபா 178,251 தொகை பெறுமதியான 161 குழாய்கள் பயன்படுத்தப்பட்டது தொடர்பாக எதிர்காலத்தில் அதனைப் பயன்படுத்துவதற்காக திட்டமொன்றேனும் இன்மையால் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

(iv) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் மேலதிக செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், பிரதேச சபையினால் திட்டமிட்டுள்ள பராமரிப்பு தளம் தொடர்பாக தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 8,390,000 பெறுமதியான 02 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

3.3 பதவியணிக் கடன்

------------------------------

2004 ஆண்டின் போது ஓய்வு பெற்றிருந்த அலுவலர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 33,886 இற்கான கடன்தொகை ஒன்று 2015 ஜூலை 21 கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 09 அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 476,323 இனை ஒரே தடவையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு பௌதீக வளங்கள்

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 62,090 பெறுமதியான 02 நிலையான சொத்து விடயங்கள் மற்றும் பெறுமதியினை இனங்காணப்படாத கப் வண்டி ஒன்று 04 வருடங்கள் மற்றும் 07 வருடங்களை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் அச் சொத்துக்கள் உரிய நிலைக்கு மாற்றுவதற்காக அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 28,960 பெறுமதியான 06 பண்ட அலகுகள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 03 அலகுகள் 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் விநியோகிக்காமல் களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

3.5 ஒப்பந்த நிருவாகம்

-------------------------------

(அ) ரூபா 13,189,311 பெறுமதியான 102 ஒப்பந்த வேலைகள் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி பிரிவுகள் 177 மற்றும் 178 இன் ஏற்பாடுகளை கடைபிடிக்கப்படாமல் சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு சாட்டப்பட்டிருந்தன.

(ஆ) பாததும்பர பிரதேச செயலகத்தைச் சேர்ந்த காணி ஒன்றில் 2012 ஆண்டின் போது பிரதேச சபைக்காக ரூபா 23,338,038 தொகை ஒன்று செலவிடப்பட்டு கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடம் அமைந்துள்ள 0.1028 ஹெக். கொண்ட காணிப் பகுதி 2015 ஜூலை 20 திகதியளவில் பிரதேச செயலாளரிடம் இருந்து பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 07 வருமான விடயங்களில் நூற்றிற்கு 11 முதல் நூற்றிற்கு 171 வரையும், 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் நூற்றிற்கு 170 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்